நகர் ஊரமைப்பு ஆணையர் அலுவலகம்,
807, அண்ணாசாலை,
சென்னை-600 002.

# சுற்றறிக்கை

ந.க.எண்.26423/2013 சிபி நாள்:30.12.2013

பொருள்: நகர் ஊரமைப்புச் சட்டம் 1971, பிரிவு 113C-ன் கீழ், நிலையிலுள்ள கட்டிடங்களை வரன் முறைப்படுத்த வேண்டி பெறப்படும் உத்தேசங்களுக்கு வசூலிக்கப்பட வேண்டிய கூராய்வுக் கட்டணம் குறித்து தெளிவுரை வழங்குதல் - சார்ந்து.

பார்வை: அரசாணை எண்.234 மற்றும் 235, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.30.10.12

-----

சார்நிலை அலுவகங்களிலிருந்து நிலையிலுள்ள கல்வி உபயோக கட்டிடங்கள் மற்றும் பிற உபயோக கட்டிடங்களுக்கு தலைமை அலுவலகத்தின் தொழில்நுட்ப இசைவு / ஒப்புதல் கோரி பெறப்படும் உத்தேசங்களில், நிலையிலுள்ள கட்டிடங்கள் கட்டப்பட்டதற்கான வருடம் குறித்த தெளிவான ஆவணம் மற்றும் உரிய சான்றுகள் இன்றி பெறப்படுவதால், 01.07.2007க்கு முன் கட்டப்பட்ட கட்டிடங்கள் மற்றும் 01.07.2007ற்கு பின்னர் கட்டப்பட்ட கட்டிடங்களை பிரித்து அறியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் நகர் ஊரமைப்புச் சட்டம் 1971, பிரிவு 113C-ன் கீழ் வெளியிடப்பட்டுள்ள அரசாணை எண்.234 மற்றும் 235, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.30.10.12-ன்படி வரன் முறைப்படுத்தப்பட வேண்டிய கட்டிடங்களுக்கு வசூலிக்கப்பட வேண்டிய கூராய்வுக் கட்டணம் வசூலிக்கப்படாமல் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படும் நிலை உள்ளது.

எனவே இனி வரும் காலங்களில் சார்நிலை அலுவலகங்களிலிருந்து, நிலையில் கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு தலைமை அலுவலகத்தின் தொழில் நுட்ப இசைவு / ஒப்புதல் கோரி பெறப்படும் அனைத்து உத்தேசங்களுக்கும், பார்வையில் காண் அரசாணையில் குறிப்பிட்டுள்ளபடி கட்டிடங்களின் மொத்தப் பரப்பளவிற்குரிய கூராய்வு கட்டணத்தினை நகர் ஊரமைப்பு ஆணையர் பெயரில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பி வைத்திடுமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேலும் தலைமை அலுவலகத்தில் பரிசீலனையில் உள்ள கோப்புகளுக்கும் மேற்கண்டவாறு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

இச்சுற்றறிக்கை உடன் அமலுக்கு வருகிறது.

இச்சுற்றறிக்கை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகைச் சான்றினை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஓம்/- ஆ.கார்த்திக்
நகர் ஊரமைப்பு ஆணையர்.

பெறுநர்:
1. அனைத்து சார்நிலை அலுவலர்கள்
2. தலைமை அலுவலக உதவி இயக்குநர்கள்,
   திட்ட உதவியாளர்/ மேற்பார்வையாளர்கள்.
3. கணக்கு அலுவலர் / உதவி கணக்கு அலுவலர்,
   ஆராய்ச்சி உதவியாளர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்